# என் மாணவன்
# என் பொறுப்பு

ஆசிரியர் பணி என்பது ஒரு தனிமனிதனின் பண்புகள், திறமைகள் மற்றும் எதிர்காலத்தை வடிவமைக்கும் உன்னதமான பணியாகும். மக்கள் என்னை ஒரு நல்ல ஆசிரியராக நினைவுக் கூர்ந்தால் அதுவே எனக்கு கிடைத்த மிகப்பெரிய கௌரவம்.

***- Dr. A. P. J. Abdul Kalam***



**S. Sathish Kumar,**

**District Child Protection Officer,**

**Department of Child Welfare and Special Services,**

**Namakkal.Mobile : +91 97914 07362**

# மாணவ மாணவிகள் ஏன் படிப்பில் குறைவுபடுகிறார்கள் ?

குழப்பமான வீட்டுச் சூழல்

ஒழுக்கத்தை சரியாக போதிக்கும் சமூக வீட்டு சூழல் இல்லை.

பெற்றோரில் ஒருவர் அல்லது இருவர் மரணம்

சமூக ஊடகங்கள் / திரைப்படங்கள் தாக்கம்

போதைக்கு அடிமையான தந்தை

குடும்ப வறுமை

தாழ்வு மனபான்மை

சிக்கலான பாடங்கள் - புரிந்து கொள்வது கடினம்

கவலை மற்றும் மன அழுத்தம்

கற்றல் வாய்ப்புகளுக்கு குறைவான செயல்கள்

இத்தனையும் உள்ள ஒரு மாணவ சமுதாயம் உங்கள் கண்முன் அமர்ந்துள்ளது. அவர்களின் வளர்ச்சிக்கு உங்கள் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது. இவ்வளவு பிரச்சனைகளையும் மறக்கடிக்க செய்து அவனை கல்வியில் மட்டுமே கவனம் செலுத்த செய்ய வேண்டுமென்றால் நம் கற்பிக்கும் திறன், தகவல் தொடர்பு கொள்ளும் திறன் எந்தளவிற்கு மெருகேற்ற பட்டிருக்க வேண்டும். நம் கற்பித்தல், பாராட்டுதல், உற்சாகப்படுத்துதல், மாணவர் மீது கவனம் கொள்ளுதல் என்று அனைத்தும் சிறப்பாக இருக்கும் பட்சத்தில் மட்டுமே ஆசிரியரால் மாணவர்கள் மத்தியில் மாற்றத்தை கொண்டுவர முடியும்.

# மாணவர்கள்/ மாணவிகள்

# ஆசிரியர்களிடம் என்ன

# எதிர்பார்க்கின்றார்கள் ?

# 1. ஆர்வத்துடன் பாடம் நடத்தி தங்களுடன் கலந்துரையாடும் ஆசிரியர்களை விரும்புகிறார்கள்



கல்வி மட்டுமல்லாமல் மற்ற விசயங்களையும் மாணவர்களிடம் கற்பித்தேன். கதைகள் கூறுவது, அவர்களது குடும்பப் பின்னணியைப் புரிந்துக்கொள்வது, அவர்களின் எதிர்காலம் பற்றி அவர்களோடு உரையாடுவது, அதற்காக வழிகாட்டுவது, ப்ரொஜெக்டர் மூலம் பல விசயங்களை கற்றுக்கொடுப்பது என்று அவர்களின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை கொண்டேன். நான் இவற்றை செய்ததால் அவர்கள் என்மேல் உண்மையான அன்பை கொண்டிருந்தனர்.

- ஜி பகவான்

# 2. ஆசிரியர்கள் வகுப்பை சுவாரஸ்யமாகவும் கொஞ்சம் நகைச்சுவையாகவும் நடத்த வேண்டும்



ஒரு மாணவர்கள்/மாணவிகளின் வாழ்க்கையை வடிவமைப்பதில் ஆசிரியர்கள் முக்கியபங்கு வகிக்கின்றனர். குழந்தைகளை சரியாக வழிநடத்தினால் அவர்களால் பல சாதனைகள் செய்ய முடியும். வறுமையில் வாழும் குழந்தைகளின் ஒரே நம்பிக்கையும் கல்வியும் ஆசிரியர்களும் தான் என்று உணர்ந்து ஒவ்வொரு ஆசிரியரும் செயல்பட வேண்டும்.

- அன்னபூர்ணா மோகன்.

வார்த்தைகள் பயன்பாடு மிகவும் தெளிவாகவும் உடல்மொழி கம்பீரமாகவும் இருக்க வேண்டும். உணவுக்கு சுவை எவ்வளவு முக்கியமோ அந்தளவிற்கு உரையாடலுக்கு நகைச்சுவையும் மிகவும் முக்கியம். சிரிப்பு என்பதுவும் உணர்வின் வெளிப்பாடே, அதற்காக அடுத்தவர்களை குறைத்து மதிப்பிடும் நகைச்சுவையை தவிர்க்க வேண்டும்.

# 3. எந்த ஆசிரியரிடமிருந்து கற்றுக்கொள்கிறார்களோ அந்த ஆசிரியரை விரும்புகிறார்கள்

ஒரு சில ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு தன்னம்பிக்கை வளர்க்கும் புத்தகங்களை படிக்க கொடுக்கின்றனர். இது அவர்களை பிழையில்லாமல் தமிழில் எழுதவும் உலகத்தை பற்றிய தெளிவையும் அவர்களுக்குள் ஏற்படுத்தியது. கல்வியின் மீது ஆர்வத்தை ஏற்படுத்தியது. ஏங்கள் ஆசிரியர் ஒரு அறிவியல் கொண்டு வருவார், அதில் புதிய கண்டுபிடிப்புகள் நிறையவே இருக்கும், அவற்றை எங்களுக்கு அவர் விவரிக்கும் விதம் எங்கள் மனத்திரையில் காட்சியாக உருவமெடுக்கும். வளரிளம் பருவத்தினர் தங்கள் ஆசிரியர் அறிவுக் களஞ்சியமாக இருக்க வேண்டுமென்று ஆசை படுகிறார்கள்.

**"ஆசிரியர்கள் நடமாடும் நூலகம்"**

# 4. எந்த ஆசிரியர் தங்கள் தவறை மாணவர்களிடம் ஒப்புக் கொள்கிறார்களோ அந்த ஆசிரியரை விரும்புகிறார்கள்

இங்கு யாரும் அனைத்தும் தெரிந்தவர்களும் கிடையாது, தவறு செய்யாதவர்களும் கிடையாது. ஆக மாணவர்கள் மாணவிகளின் சில கேள்விகளுக்கு பதில் தெரியவில்லையெனில் அதை ஒப்புக்கொள்ளும் ஆசிரியரை தான் மாணவர்களும் மாணவிகளும் விரும்புகின்றனர், அந்த விடை தெரியாத கேள்வியை ஆய்வு செய்து மறுநாள் சொல்லும் ஆசிரியரை அவர்கள் கொண்டாடுகிறார்கள்.

"அறிவாளி தினமும் கற்றுக்கொள்கிறார்"

# 5. மாணவர்கள் மரியாதையாக பேசும் ஆசிரியர்களை விரும்புகிறார்கள்

வளரிளம் பருவ குழந்தைகள் தங்களை பெரியவர்களாக நினைத்து செயல்பட ஆரம்பித்துவிட்டார்கள், நீங்கள் அவர்களை அனைவர் முன்பும் விமர்சனம் செய்வதையோ கடுமையான வார்த்தைகள் பயன்படுத்தி கண்டிப்பதையோ அவர்கள் விரும்புவதில்லை. ஆனால் அன்பு செலுத்தும் ஆசிரியர் கண்டிக்கும்போது அதை அவர்கள் பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை, ஆசிரியர்களின் செயல்பாடுகளுக்கும் மனபாங்கிற்கும் மாணவ மாணவிகள் மதிப்பெண் கொடுக்கிறார்கள். நீங்கள் நல்ல மதிப்பெண் பெற்றால் தான் மாணவர்கள் உங்கள் வார்த்தைகளுக்கு உயிர் கொடுக்கின்றனர். நீங்கள் நல்ல மதிப்பெண் வாங்காத ஆசிரியர் எனில் உங்கள் வார்த்தைகள் காற்றுடன் கரைந்துவிடும். ஆசிரியரின் மதிப்பெண் என்பது அவர் பயன்படுத்தும் வார்த்தை, மாணவர்கள் மேல் உள்ள அக்கறை, மாணவர்களை உற்சாகப்படுத்தும் விதம் ஆகியவற்றால் கணக்கிடப்படுகிறது மாணவர்களால்.

**"என் மாணவர்கள் எனக்கு நல்ல மரியாதை கொடுக்கின்றனர், காரணம் என்னவெனில் நானும் அவர்களை மரியாதையாக நடத்துகிறேன், அவர்களின் தனிப்பட்ட உணர்வுகளுக்கு மரியாதை கொடுக்கிறேன்"**

# 6. அவர்கள் வெறும் விரிவுரை மட்டுமே செய்யாத ஆசிரியர்களை விரும்புகிறார்கள்.

பாடத்தை தாண்டி புதுமையான கருத்துக்களை பகிர்ந்து கொள்ளும் ஆசிரியர்களை மாணவர்கள் விரும்புகிறார்கள். ஆசிரியர் தினசரி நாளிதழ்களை வாசிக்க வேண்டும். தினசரி நிகழ்வுகளை சுவரஸ்யமாக பல்வேறு கோணங்களில் பகிர்ந்து கொள்ளும்போது கருத்துக்களோடு ஆசிரியரும் அவர்களின் மனதில் பதிவாகிறார். அவர் மாணவ மாணவிகள் மனதில் பதிவாகும்போது ஆசிரியரின் வார்த்தைகள் உயிர் பெருகின்றன.

**“கல்வியை உலக வாழ்க்கையோடு ஒருங்கிணைந்து கற்பிக்க வேண்டும்”**

# 7. மாணவர்கள் எடுக்கும் முயற்சியை பாராட்டும் ஆசிரியர்களை விரும்புகிறார்கள்.

பாராட்டு தாலாட்டைவிட புனிதமானது. அதையும் தாமதமாக கொடுக்காமல் உடனடியாக கொடுக்க வேண்டும். பாராட்டுக்கு ஏங்காத மயங்காத மனிதர்கள் இல்லை, பாராட்டு கொடுக்கும் மகிழ்ச்சியை வெளியே காட்டாத நபர்கள் தான் உள்ளனர். பாராட்டு கொடுக்க நீங்கள் செலவு செய்ய வேண்டிய அவசியமில்லை. ஆனால் பாராட்டைக் கொடுக்க உங்கள் மூளையை நீங்கள் சலவை செய்ய வேண்டும், அதை தாரளமயமாக்க வேண்டும், பார்வையில்படும் நல்லவற்றை மாணவர்களிடமிருந்து அடையாளம் கண்டு அவர்களை பாராட்ட வேண்டும். பல மாணவர்களின் தனித்திறமையை யாரும் அடையாளம் கண்டு பாராட்டுவதில்லை, ஆதலால் அவர்களின் தனித்திறன் வெளிப்படாமலே போய்விடுகிறது.

**"என் ஆசிரியர் என்னுடைய நோட்டில் அவர் போட்ட முதல் Good-ஐ நான் பார்த்து ரசித்தேன், அந்த முதல் Good தான் மீண்டும் மீண்டும் Good வாங்க வேண்டும் என்ற உணர்வை எனக்குள் ஏற்படுத்தியது, நான் இன்று வாழும் நல்ல வாழ்க்கைக்கு அந்த முதல் Good தான் காரணம் என்று இப்போது உணர்கிறேன்."**

# 8. கற்பிப்பதில் புதிய முயற்சி எடுக்கும் ஆசிரியர்களை விரும்புகிறார்கள்.

எல்லா மாணவர்களுக்கும் ஒரே மாதிரியான கற்பித்தல் என்பதே மாணவர் சமுதாயத்தின் மீதான வன்முறை என்று குறிப்பிடுகிறார்கள் உளவியாளலர்கள். ஒரு ஆசிரியர் மாணவர் உடை அணிந்து வந்து கற்பிக்கிறார். ஒரு ஆசிரியர் தரைத்தளத்தில் படம் வரைந்து கற்பிக்கிறார். ஒரு ஆசிரியர் டிஜிட்டல் வடிவில் கற்பிக்கிறார். ஒரு ஆசிரியர் முன் தயாரிப்பு செய்து பிறகு பாடம் நடத்துகிறார். இப்படி கற்பித்தல் பணியை சுவரஸ்யமாகவும் எளிதில் புதுமையாகவும் குழந்தைகளிடம் கொண்டு செல்லும் ஆசிரியரை மாணவர்கள் விரும்புகிறார்கள்.

**"கற்பிப்பதில் புதிய முயற்சியை மேற்கொள்ளும் போது அவர்கள் மாணவர்கள் மீது கொண்ட அன்பு வெளிப்படுகிறது"**

# 9. ஒரு செயலை சிறப்பாக செய்ய உற்சாக படுத்தி சவால் விடும் ஆசிரியர்களை விரும்புகிறார்கள்.

சவால் என்று சொல்வதை காட்டிலும் ஒரு எல்லை கோட்டை நிர்ணயிக்க வேண்டும். அந்த எல்லைக்கோடு அவனது திறமையை வெளிக்கொண்டு வரவேண்டும், அவனுள் தன்னம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். கிரிக்கெட்டில் எல்லைக்கோட்டை தாண்டினால் தான் 6 ஓட்டங்கள் என்பதை போன்று, ஒவ்வொன்றுக்கும் குறிப்பிட்ட செயல்களுக்கும் ஒரு எல்லையை தீர்மானிக்கலாம். நீங்கள் இந்த தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்றால் உங்களுக்கு இல்லம்தேடி உயர்கல்வி வாய்ப்பு கிடைக்கும், நம்மளா இல்லை இந்த படிப்பா என்று ஒரு கை பார்த்துவிடலாம் என்று படிக்க தூண்ட வேண்டும்.

**"உற்சாகப்படுத்துவது என்பது ஊட்டச்சத்துள்ள உணவு மற்றும் தடுப்பூசி போன்றது, தடுப்பூசியும் ஊட்டச்சத்துள்ள உணவும் இல்லாமல் எப்படி ஆரோக்கியமாக வாழ முடியாதோ அதேபோல் உற்சாகப்படுத்த எவருமில்லையெனில் எவராலும் தனித்திறமையை வெளிப்படுத்தவும் முடியாது வளரவும் முடியாது"**

# 10. சிந்திக்க, பிரதிபலிக்க, விளையாட நேரம் கொடுக்கும் ஆசிரியரை விரும்புகிறார்கள்.

பட்டனை அழுத்தியவுடன் விளக்கு வெளிச்சத்தை கொடுப்பதை போல மாணவர்களிடம் இருந்து உடனடியாக எதையும் எதிர்பார்க்கக் கூடாது. ஒவ்வொரு மாணவனும் ஒரு தனிரகம் இவர்கள் கற்றல் திறனும், பேசும் திறனும், உள்வாங்கும் திறனும் வேறுபடும். ஆசிரியர் மனதில் நினைக்கும் மாற்றத்தை உடனடியாக மாணவர்களிடம் கொண்டுவர முடியாது. ஆனால் அவர்களை படிப்படியாக நல்வழிப்படுத்திட முடியும். மாணவர்களின் செயல்களில் மாற்றமில்லை என்று ஆசிரியர்கள் மனம்விட்டு விடக்கூடாது. நீங்கள் மனம்விட்டுவிடும் அந்த நொடிப்பொழுதில் கூட மாணவர் மனம் மாறலாம்.

**"எனது எண்ணங்களை என் ஆசிரியர் கேட்டார், அவர் அதில் நல்லவற்றை மட்டும் வடிகட்டி எண்ணை மெருகேற்றினார். நான் எங்கு சென்றாலும் அவரின் வார்த்தைகள் என்னுடன் பயணிக்கின்றன. என் ஆசிரியரின் வார்த்தைகள் என்னிடமிருந்து எனது அடுத்த தலைமுறைக்கு என்மூலம் பயணமாகிறது."**

# 11. தன்மீது எப்போதும் ஒரு கண் வைத்திருக்கும் ஆசிரியரை விரும்புகிறார்கள்

ஆறு மாதங்கள் ஆகியும் என் ஆசிரியருக்கு என் பெயர் நினைவிலில்லை. என்னை அவர் பெயர் சொல்லி மரியாதையாக அழைக்கும்போது அவர்மேல் எனக்கு மரியாதையும் அன்பும் அதிகமாகின்றது. நான் 2 மாதத்திற்கு முன்பு செய்த குறும்பை அவர் நினைவுகூறும்போது எனக்கு அவர் என் செயல்களையும் என்னையும் கவனித்து வருகிறார் என தெரியவருகிறது. ஒரு முறைதான் என் தந்தையை என் ஆசிரியர் பார்த்தார் ஆனால் என்னைவிட என் அப்பாவின் உழைப்பை அடிக்கடி என்னிடம் நினைவு கூறுகிறார்.

**"பள்ளி ஆரம்பித்து மூன்று மாதத்திற்கு பிறகு என்னை விளையாட்டு மைதானத்தில் சந்தித்த என் வகுப்பு ஆசிரியர் நீ எந்த வகுப்பு உன் பெயர் என்ன என்று என்னை கேட்டார்."**

# 12. தங்கள் கண்ணோட்டத்தையும் எண்ணத்தையும் வெளிப்படுத்த அனுமதிக்கும் ஆசிரியரை விரும்புகிறார்கள்.

வெளிப்படுத்த வாய்ப்பு கிடைக்காத போது பல திறமைசாலிகள் வெளியே தெரியாமலே போய்விடுகிறார்கள். கண்ணோட்டம் மற்றும் எண்ணங்கள் இவை இரண்டும் அவரவர் வளர்ந்த சூழ்நிலையை பொறுத்து மாறுபடுகிறது. ஆகவே அதை வெளிப்படுத்த வாய்ப்பு கொடுக்க வேண்டும். பேசவும் சிரிக்கவும் வாய்ப்பு கொடுக்காத குழந்தை பேசும் திறனை இழந்துவிடுவார்கள். என் இறகுகள் எனும் எண்ணங்கள் பறக்க காரணம் என் ஆசிரியர் தான், அவர் என்னுடைய எல்லா முயற்சிகளையும் கண்டு வியந்து என்னை பாராட்டினார்.

**"கருத்துரிமை பெரியவர்களுக்கு மட்டுமில்லை, குழந்தைகளுக்கும் உண்டு. "**

# 13. மாணவர்கள் அமைதியான மற்றும் எளிதில் பழகக்கூடிய ஆசிரியர்களை விரும்புகிறார்கள்.

உங்களை பார்த்தால் பேச வேண்டுமென்ற உணர்வு மாணவர்களுக்கு ஏற்பட வேண்டும். நம் ஆசிரியர் என்ற உரிமையோட பேச வேண்டும். மாணவர்கள் உங்களோடு உரிமையாக எதையும் பேசும் அளவிற்கு உங்கள் நடத்தை இருக்க வேண்டும். இவரிடம் பேசினால் நம்மை கடுமையாக விமர்சிப்பார், இவரிடம் பேசாமல் இருப்பதே மேல் என்ற உணர்வு மாணவர்களுக்குள் ஏற்படாதவாறு இருக்க வேண்டும். விருந்தில் சாப்பிடும்போது இனிப்புடன் ஆரம்பிப்பது போல் எந்த மாணவ/மாணவிகளையும் பார்த்தவுடன் புன்னகையுடன் ஆரம்பிக்க வேண்டும்.

**"நல்ல உரையாடலுக்கு முதல் புன்னகையே விதையாகிறது"**

# 14. அவர்களை புரிந்து கொண்டு ஆசிரியர் மாணவர் உறவை நன்றாக கையாளும் ஆசிரியர்களை விரும்புகிறார்கள்.

மாணவர்களுக்கு பிடித்தவற்றை அறிவுபூர்வமாக பேசும் ஆசிரியர்களிடம் மாணவர்கள் நல்ல உறவுமுறையை கையாளுகிறார்கள். எல்லா மாணவரிடமும் ஒரே கருத்தை பகிர்ந்து கொள்ள இயலாது. எந்த மாணவ/மாணவிகளையும் இவர்கள் இப்படித்தான் இவ்வளவு தான் என்று நினைக்காமல் அனைவரையும் ஒரேமாதிரி கையாளும் ஆசிரியர் அனைத்து குழந்தைகளிடமும் நல்ல உறவுமுறையில் இருக்கிறார்.

"உறவுமுறைக்கு பலமாக இருப்பது உணர்வுகளை மதித்தல் மற்றும் அவர்களை புரிந்து கொள்ளுதல்"

# 15. கப்பலின் கேப்டன் போல் தங்கள் வகுப்பை நல்வழியில் வழிநடத்தும் ஆசிரியர்களை மாணவர்கள் விரும்புகிறார்கள்.

நீங்கள் அவர்களுக்கு தலைவராக இருக்க வேண்டுமென்று மாணவ/மாணவிகள் ஆசை படுகிறார்கள். நீங்கள் நல்ல தலைவராக இருக்கும் பட்சத்தில் உங்கள் வார்த்தைக்காக அவர்கள் காத்திருக்கின்றனர். ஆசிரியர் என்ற வரையறையை தாண்டி உங்களை தலைவராக பார்க்க ஆரம்பித்து விட்டனர். தலைவர் என்றால் தலைமைத்துவ பண்புகள், பண்புகள் என்று சொல்லும்போது அன்பு, கருணை, அக்கறை, ஊக்கப்படுத்துதல், வழிகாட்டுதல் என்று நற்பண்புகளின் குவியலாக ஆசிரியர் இருக்க வேண்டும் என்று மாணவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

**"ஒரு நல்ல தலைவன் தான் பல நல்ல தலைவர்களை உருவாக்க முடியும்"**

# மாணவ மாணவிகளை ஊக்கப்படுத்துங்கள்...

- யாரையும் குறைத்து மதிப்பிடாதீர்கள்
- மற்றவர்களின் குறைகளை அனைவர் முன்பும் சுட்டிக்காட்டி கேலி கிண்டல் செய்ய வேண்டாம்.
- திறமையற்ற மாணவ மாணவிகள் என்று யாரையும் கிண்டல் செய்ய வேண்டும்.
- குறைவான மதிப்பெண் எடுக்கும் மாணவ மாணவிகளுக்கு தான் நாம் அனைவரும் உதவி செய்ய வேண்டும்.
- ஒவ்வொரு மாணவ மாணவிகளும் தனித்துவம் ஆனவர்கள் என்பதை நாம் உணர வேண்டும்.
- குழந்தைகளின் திறமையை கண்டறிந்து அதை மேலும் மெருகேற்றும் ஆசிரியர் ஆக ஒவ்வொரு ஆசிரியரும் இருக்க வேண்டும்.
- நம் மாணவன் நம் பொறுப்பு என்ற உணர்வுடன் நாம் செயல்பட வேண்டும்.

# என் மாணவன்
# என் பொறுப்பு

## நான் மெதுவாக நடப்பவன்தான், ஆனால் ஒரு போதும் பின்வாங்குவதில்லை

## - ஆப்ரஹாம் லிங்கன்

என்றும் குழந்தைநேய பணியில்

செ. சதீஸ் குமார்,

மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்.

தொடர்புக்கு - 97914 07362